(கு.வி.மு.ச.அத்தியாயம் XXIII)

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இராதாபுரம்

| | | |
|---|---|---|
| ஆண்டுப்பட்டிகை<br>பல்வகை<br>முதன்மைப் பதிவேடு<br>அமர்வு | } | CC.No. 329/2020 |

அரசுதரப்புக்காக சாட்சியின் சான்றுரைகள் PW– 9

| | | |
|---|---|---|
| பெயர் | : | நாகராஜன் |
| த/பெ | : | கொழுந்து நாடார் |
| கிராமம் | : | செட்டிகுளம் |
| வட்டம் | : | இராதாபுரம் |
| சாதி | : | பிசி |
| அழைத்தல் | : | கூலி |
| மதம் | : | இந்து |
| வயது | : | 60 |

(எதிரி ஆஜர்)

2023 ம் ஆண்டு ஜீன் திங்கள் 14 ஆம் நாளன்று, 1969 ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–ன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**முதல் விசாரணை :–**

1) நான் செட்டிகுளத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1,2 யை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியை தெரியாது., வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. விபத்தில் காலம் சென்ற ஆறுமுக நாடார் யார் என்று எனக்கு தெரியாது. வழக்கு சம்பவத்தை நான் கேள்விபடவில்லை. வழக்கு சம்பவம் சம்பந்தமாக என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.)

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

கடந்த 10–08–2017 அன்று மாலை 7.25 மணிக்கு செட்டிகுளம் சர்ச் அருகே ஆறுமுகம் என்பவர் பொருட்கள் வாங்கி கொண்டு மெயின் ரோட்டிலிருந்து வீட்டுக்கு போவதற்காக வடபுறம் நின்று கொண்டிருந்த போது எதிரி ஆட்டோவை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மேற்படி நபர் மோதி விபத்து ஏற்படுத்தி ஆட்டோவை கவிழ்த்து விட்டார் என்றும், அதில் ஆறுமுகநாடாருக்கு பலத்த காயம் ஏற்பட்டு மயக்கத்தில் இருந்ததார் என்றும், அவரை சாட்சிகள் தூக்கி அருகே உட்கார வைத்தார்கள் என்றும், அ.சா.1 அங்கு வந்து அவரை ஆம்புலன்சில் கிசிச்சைக்கு கொண்டு சென்றார் என்றும், அவர் இறந்து விட்டதால் ஆசாரிபள்ளம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் என்றும் மேற்படி சம்பவத்தை கேள்விபட்டதாக போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை</u>**

(கு.வி.மு.ச.அத்தியாயம் XXIII)

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இராதாபுரம்

| | | |
|---|---|---|
| ஆண்டுப்பட்டிகை<br>பல்வகை<br>முதன்மைப் பதிவேடு<br>அமர்வு | } | CC.No. 329/2020 |

அரசுதரப்புக்காக சாட்சியின் சான்றுரைகள் PW– 10

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஆனந்த் |
| த/பெ | : | கணபதி |
| கிராமம் | : | செட்டிகுளம் |
| வட்டம் | : | இராதாபுரம் |
| சாதி | : | பிசி |
| அழைத்தல் | : | கூலி |
| மதம் | : | இந்து |
| வயது | : | 40 |

(எதிரி ஆஜர்)

2023ம் ஆண்டு ஜீன் திங்கள் 14 ஆம் நாளன்று, 1969 ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–ன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**முதல் விசாரணை :–**

1) நான் செட்டிகுளத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். 2017ம் வருடம் எனது உறவினர் இறுதி ஊர்வலத்திற்கு சென்ற போது போலிசார் கேட்டுகொண்டதற்கிணங்க கையொபபம் செய்து கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதல் கையொபப்ம் என்னுடையதுதான், வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. **பார்வைமகஜரில் உள்ள முதல் கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது.** வழக்கு சம்பவம் சம்பந்தமாக என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை –**

கடந்த 11–08–2017 காலை 7.30 மணிக்கு செட்டிகுளம் நிலா கூல்டிரிங்ஸ் கடை அருகே கூடன்குளம் ஆய்வாளர் வழக்கு சம்பவத்தை பார்வையிட்டு என் முன்பும் சாட்சி ராதாகிருஷ்ணன் என்பவர் முன்பும் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மாதிரி வரைடம் தயார் செய்தார் என்றும் அதில் நாங்கள் சாட்சியாக கையொப்பம் செய்து கொடுத்தோம் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை**